தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.10.2013**

**பலன் தரும் கறிவேப்பிலை சாகுபடி!**



மருத்துவப் பயன்கள் பல கொண்ட கறிவேப்பிலை சாகுபடியிலும் கணிசமான வருவாய் பெறலாம்.

பெரும்பாலானோர் கறிவேப்பிலையை மணத்துக்காகப் பயன்படுθத்திவிட்டு உணவிலிருந்து அதை தூக்கி எறிகின்றனர். கறிவேப்பிலையில் உள்ள சத்துக்களையும், மருத்துவ குணங்களையும் அறிந்தவர்கள் அதை தூக்கி எறிவதில்லை. சுவைத்தும், சவைத்தும் சாப்பிட வேண்டிய அருமருந்து.

கருவேப்பிலையில் உள்ள சத்துக்கள்: அனைத்து வகை சமையல்களிலும் தவறாது இடம் பெற்றிருக்கும் கறிவேப்பிலையில் 0.66 சத நீர்ச் சத்து உள்ளது. 6.1 சதவீத புரதம், 0.1 சதவீத கொழுப்பு, 0.16 சதவீத மாவுப் பொருள், 6.4 சதவீத நார்ப் பொருள் மற்றும் உடலுக்கு மிகவும் தேவைப்படும் தாது உப்புக்கள் 4.2 சதமும் உள்ளது.

இது தவிர குறைந்த அளவில் காணப்படும் சத்துக்களாக 100 கிராம் இலையில் 810 மிலி கிராம் கால்சியம், 600 மிலி கிராம் பாஸ்பரஸ், 3.1 மிலி கிராம் இரும்புச் சத்து,

4.0 மிலி கிராம் வைட்டமின் சி, 2.3 மிலி கிராம் நிகோடினிக் அமிலம், வைட்டமின் ஏ ஆகியவையும் உள்ளன.

மருத்துவப் பயன்கள்: பசியைத் தூண்டி, உண்ணும் ஆவலை வளர்க்கும். செரிப்பதற்கு துணையாக இருக்கும். உடலுக்கு உரமூட்டவல்லது. வெள்ளை அணுக்களின் கிருமியை எதிர்க்கும் ஆற்றலை கறிவேப்பிலையின் சாற்றை அதிகரிக்கச் செய்கிறது. இலையுடன் பிற மருந்துகளைச் சேர்த்து துவையல் செய்து சாப்பிட பித்த வாந்தி, செரியாமை, வயிற்றுளைச்சல் குணமாகும்.

சாகுபடி முறைகள்: கறிப்பிலை சாகுபடிக்கு வடிகால் வசதியுள்ள செம்மண் நிலம் மிகவும் அவசியம். வரிசைக்கு வரிசை 5 அடி, செடிக்கு செடி 5 அடி என்ற இடைவெளியில் நடவு செய்யலாம். ஆண்டுக்கு ஒரு செடிக்கு 20 கிலோ தொழு உரத்தை பகிர்ந்து இடுதல் வேண்டும். ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 100 கிலோ இலை பறிக்கலாம். ஒரு கிலோ கருவேப்பிலை ரூ.12-க்கு விலை போகிறது. ஒரு மரத்தில் இருந்து சராசரியாக ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டலாம்.

**கத்தரி பயிர்களை நோய்களிலிருந்து காக்க என்ன வழி?**



ஆண்டில் டிசம்பர் - ஜனவரி, மே - ஜூன் மாதங்களில்தான் கத்தரி சாகுபடிக்கு ஏற்ற பருவமாகக் கருத்தப்படுகிறது. இந்த மாதங்களில் கத்தரி சாகுபடி செய்தால் அதிக மகசூலைப் பெறலாம்.

கத்தரி சாகுபடிக்கு கோ1, கோ2, எம்டியு1, பிகேஎம்1, பிஎல்ஆர்1, கேகேஎம்1, அண்ணாமலை ஆகிய ரகங்கள் ஏற்றவை. ஹெக்டேருக்கு 400 கிராம் விதையே போதுமானது.

ஆனால், இந்தக் கத்தரி சாகுபடியைப் பூச்சி மற்றும் நோய்களிலிருந்து காக்க என்ன வழி என்பது பற்றி வேளாண் துறை அதிகாரிகள் கூறியது:

"கத்தரி நடவு செய்த 15-20 நாள்களில் கத்திரிச் செடிகளின் நுனித் தண்டுகள் இலைகளுடன் காய்ந்த தலை சாய்ந்து தொங்கி காணப்படும். அவைகளைக் கிள்ளி உள்ளே பார்த்தால் தண்டு மற்றும் காய்த்துளைப்பான் எனக் கூறப்படும் வெள்ளை நிற புழு காணப்படும். இவ்வகைப் புழுக்கள், காய்கள் பிஞ்சாக இருந்து வளர்ந்து வரும் சமயத்தில் காய்களைக் குடைந்து சாப்பிட்டு சேதப்படுத்தும்.

இதனைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடிகளின் நுனித் தண்டைக் கிள்ளி எறிந்து விட வேண்டும். பாதிக்கப்பட்ட காய்களைப் பறித்து அழித்து விட வேண்டும். கார்பரில் 50 சதத் தூளை ஒரு லிட்டருக்கு 2-4 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். காய்களைத் தாக்கும் பருவத்தில் 15 நாள்களுக்கு ஒரு முறை எண்டோசல்பான் 2 மிóல்லியை ஓரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

அல்லது குயினால்பாஸ் 25இசி 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருடன் 2 மில்லி வேப்ப எண்ணெய் ஓரு லிட்டர் தண்ணீரில் கலந்த கலவையுடன் சேர்த்துத் தெளிக்க வேண்டும். அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 50 மில்லியை ஓரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

சாம்பல் நிற மூக்கு வண்டு: இந்த வகைப் பூச்சிகள் இலைகளிலுள்ள சாறினை உறிஞ்சுவதால், இலைகள் சக்தியிழந்து காய்ந்துவிடும். இதைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு கார்போக் பியூரான் 15 கிலோவை செடி நட்ட 15 நாள்களுக்குப் பின்னர் செடிகளின் வேர்ப் பாகத்தில் போட வேண்டும்.

நூற் புழுக்கள்: நூற் புழுத் தாக்குதலைத் தடுக்க விதைகளை ட்ரைக்கோடெர்மா விரிடி அல்லது ட்ரைகோடெர்மா ஹர்சியானம் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் பூஞ்சாண விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

சிறப்பு சிலந்திப் பூச்சி: இதைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகத் தூளை லிட்டருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது டைக்கோபால் 3 மில்லி மருந்தை 1 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

வெள்ளை ஈக்கள்: கோடை காலம் பயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப் பொறி ஹெக்டருக்கு 12 வீதம் வைக்க வேண்டும். வேப்ப எண்ணெய் 3 மில்லியுடன் 1 லிட்டர் தண்ணீர் கலந்து, அதனுடன் டீப்பால் என்ற ஒட்டும் திரவம் 1 மில்லியுடன் ஓரு லிட்டர் தண்ணீர் கலக்கப்பட்ட கலவையுடன் சேர்த்துத் தெளிக்க வேண்டும்.

இலைப்புள்ளி நோய்கள்: பருவமழைக் காலங்களில் வானம் மே மூட்டத்துடன் இருக்கும் சமயங்களில் இலைப்புள்ளி நோய் அதிகமாகக் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 பூசணக் கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

வாடல் நோய்: இந்த நோய் தாக்கப்பட்ட செடிகளின் இலைகள், காய்கள் வாடிவிடும். இதைக் கட்டுப்படுத்த விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு, ஒரு கிலோ விதைக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது கேப்டான் அல்லது திராம் 2 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். அல்லது காப்பர் ஆக்சி குளோரைடு 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளித்து இந்நோய் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம்.

சிறு இலை நோய்: இந்த நோய் தாக்கப்பட்ட செடிகள் குட்டையாகவும் இலைகள் சிறுத்தும் காணப்படும். இந்தச் செடிகள் பூக்காமல் மலடாக இருக்கும். இது, நச்சுயிரி வகை நோய். இந்த நோய் தாக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி எரித்துவிட வேண்டும்.

இந்தத் தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடித்தால் கத்திரி சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்'.

**நெற் பயிரில் குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்துதல்!**



திருநெல்வேலி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற் பயிர்களில் குருத்துப் பூச்சியின் தாக்குதல் ஆங்காங்கே பரவலாகக் காணப்படுகிறது. இந்தக் குருத்துப் பூச்சியானது தண்டு துளைப்பான் எனவும் அழைக்கப்படுகிறது.

இப் பூச்சியின் புழுக்கள் தூர்களில் சிறு துவாரம் ஏற்படுத்தி தண்டுக்குள் சென்று தண்டுப்பகுதியை உணவாக உள்கொள்கிறது.

தாக்குதல் அறிகுறிகள்: கதிர் வரும் தருணத்தில் வெண் கதிர் காணப்படும். சாதாரண நெல்மணிகள் நிறம் இல்லாமல், மணிகள் வெள்ளை நிறத்தில் காணப்படும். பூச்சித் தாக்கிய மணிகள் காய்ந்து விடும். இளம் பயிராக இருந்தால் பயிர் தூர்கட்டும் பருவத்தில் நடுக் கருத்து காய்ந்து காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: தழைச்சத்து உரங்களை மொத்தமாக இடமால் பிரித்து இட வேண்டும். தழைச்சத்துடன் வேப்பம் புண்ணாக்கு கலந்து இட வேண்டியது அவசியம். இனக் கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 என்ற வீதத்தில் வைத்து ஆண் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அளிக்கலாம்.

தாக்குதல் பொருளாதார சேத நிலையாகிய வெண்கதிர் 2 சதவீதத்துக்கு அதிகமாகவோ அல்லது சாய்ந்த நடுக்குருத்து 10 சதவீதத்துக்கு அதிகமாகவோ இருந்தால் பூச்சி மருந்துகளை தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

குளோர் ஆன்ட்ரனிலிபுரோல் 18.5 சதவீதம் 60 மி.லி. என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 5 சதவீதம், எஸ்பி 400 கிராம் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். பாஸ்பமிடான் 40 சதவீதம், எஸ்எல் 500 மிலி என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு

பயன்படுத்தலாம். இல்லையெனில் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 4 சதவீத குருணையை ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவில் இட்டுக் கட்டுப்படுத்தலாம்.

**மானியத்துடன் துவரை சாகுபடி**



பயறு வகை பயிர்களில் துவரை மிகவும் முக்கியமான பயிராகும். துவரை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் துவரை உற்பத்தி0த் திறனைப் பெருக்கவும் வேளாண்மைத் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

துவரை சாகுபடியின் முக்கியத்துவம்: தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்யும்போது சில சத்துக்கள் மண்ணில் பற்றாக்குறை ஏற்படும். துவரையின் வேர்கள் மண்ணில் ஆழத்துக்குச் சென்று மண்ணின் அடிப் பகுதியில் உள்ள சத்துக்களை பயன்படுத்துவதால், பிற பயிர்கள் பயிரிடும்போது மண்ணில் உள்ள ஊட்டசத்தை சிறந்த முறையில் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

துவரையின் வேர் முடிச்சுகள் தழைச்சத்தின் தன்மையை அதிகரிக்கிறது. துவரையின் வேர்ப் பகுதியில் இருந்து சுரக்கும் அமிலங்கள் மண்ணில் மணிச்சத்தைக் கரைத்து மற்ற பயிர்களுக்கு கிடைத்திடச் செய்ய உறுதுணையாக உள்ளது.

துவரை முதிர்ச்சி அடையும்போது அதிலிருந்து உதிரும் இலைகள் நிலத்துக்கு ஊட்டச்சத்து அளிக்கும்.

இந்தியாவில் இப்போதைய உணவு உற்பத்திசுதந்திரத்துக்குப் பிறகு 5 மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால், பருப்பு வகைகளின் உற்பத்தி அதிகரிக்கவில்லை. எனவே, வெளிநாடுகளில் இருந்துதான் பருப்பு வகைகள் இறக்குமதி

செய்யப்படுகின்றன. உள்நாட்டில் பருப்பு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவே விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

சாகுபடி குறிப்புகள்: நீர்ப் பாசன வசதியுடைய செம்மண் மற்றும் வண்டல் மண் துவரை சாகுபடிக்கு ஏற்றது. கரிசல் மண்ணில் வடிகால் வசதி மிகவும் அவசியமானது. அதிக மகசூல் பெற விதைகளை மண் கலவை நிரப்பப்பட்ட பாலித்தீன் உறைகளில் விதைத்து நாற்றாங்கால் பராமரிக்க வேண்டும். 30 நாள் நாற்றுகளை நட வேண்டும். நடுத்தர கால துவரையின் வயது 130 முதல் 135 நாள்களாகும்.

மானியம்: துவரை சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படும். விதைகள் மற்றும் இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கப்படும். விருப்பமுள்ல விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெறலாம்.

**மதுரையில் கனமழை**

மதுரை நகர், புறநகர், வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

மதுரையில் புதன்கிழமை பகலில் வெயில் கொளுத்தியது. பிற்0பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 8 மணியளவில் பலத்த மழை பெய்தது. நகரின் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. பெரியார் பஸ் நிலையம், ரயில் நிலைய பகுதி, சிம்மக்கல், கோரிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சாலையில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதிகளில் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் பலத்த மழை பெய்தது. தென்கரை ஊத்துக்குழி கிராமத்தில் கண்மாய் பாசனம் மூலம் நட்ட நெல்நாற்று நீரில் மிதந்தன.

வாடிப்பட்டி சோழவந்தான் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான மேலக்கால், தென்கரை, திருவேடகம், குருவித்துறை, இரும்பாடி, நாச்சிகுளம் உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதியில் புதன்கிழமை மாலை இடியுடன் கூடிய மழை

தொடர்ந்து 3 மணி நேரத்துக்கு மேல் பெய்தது. இதனால் தெருக்களில் மழைநீர் வெள்ளமென பெருக்கெடுத்து ஓடியது.

மழையளவு: புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்) விவரம்: பேரணை - 102, குப்பனம்பட்டி - 60, ஆண்டிபட்டி - 24, மதுரை - 2.8, சாத்தையாறு அணை - 2, மேட்டுப்பட்டி - 2, கள்ளந்திரி - 4, சிட்டம்பட்டி - 7.8, மேலூர் - 4.7, விரகனூர் - 2.5.

**கடலை எண்ணெய், நெய் விலை இறங்குமுகம்தும்பை நல்லெண்ணெய் விலை உயர்வு**

மதுரை சந்தையில் கடலை எண்ணெய், நெய் விலை குறைந்தும் தும்பை நல்லெண்ணெய் விலை அதிகரித்தும் காணப்படுகிறது.

சமையல் எண்ணெய் விலை நிலவரம் குறித்து மதுரை மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வணிகர்களிடம் விசாரித்ததில் இந்த நிலவரம் தெரியவந்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், குஜராத் மாநிலத்தில் இருந்தும் நிலக்கடலை பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால், கடலை எண்ணெய் விலை குறைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த வாரம் லிட்டருக்கு ரூ.95 ஆக இருந்த கடலை எண்ணெய் விலை, இந்த வாரம் ரூ.92 ஆக குறைந்து உள்ளது. அடுத்த வாரம் இந்த விலை மேலும் குறையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம், தும்பை எள்ளில் உற்பத்தியாகும் தும்பை நல்லெண்ணெய் விலை உயர்ந்துள்ளது. கடந்தவாரம் இந்த எண்ணெய் விலை ஒரு லிட்டருக்கு ரூ. 214 ஆக இருந்தது. இது தற்போது ரூ.220 ஆக அதிகரித்துள்ளது. அடுத்தவாரம் இன்னும் விலை அதிகரிக்கக் கூடும். வெள்ளை எள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கொல்கத்தா பகுதியில் இருந்து வெள்ளை எள் வருவது அறவே குறைந்து விட்டதால் தும்பை நல்லெண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு முழுவதும் நல்லெண்ணெய் விலை ஏறுமுகத்தில் இருந்து கொண்டிருக்கும் என வணிகர்கள் தெரிவித்தனர். நெய் விலை, லிட்டருக்கு ரூ.10 லிருந்து ரூ.20 வரை

குறைந்துள்ளது. கடந்த வாரம் லிட்டர் ரூ.410 ஆக இருந்த நெய் விலை இந்த வாரம் ரூ.380-லிருந்து ரூ.390 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மற்ற எண்ணெய் விலைகளில் பொதுவாக மாற்றமில்லை. பாமாயில் லிட்டர், ரூ.60, சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் லிட்டர் ரூ.89, வனஸ்பதி லிட்டர் ரூ.64, நல்லெண்ணெய் சாதா ரகம் லிட்டர். ரூ.201, நல்லெண்ணெய் தீபவழிபாட்டு ரகம் லிட்டர் ரூ.80 முதல் ரூ.100 என்ற அளவில் விலை நிலவரம் இருந்தது.

**நிலக்கோட்டை பகுதியில் கோழிக் கொண்டை பூ அதிக விளைச்சல்**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பகுதியில் தற்போது கோழிக் கொண்டை பூ வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், நிலக்கோட்டை பகுதியில் பூக்களின் வரத்து மிகவும் குறைந்தது. புரட்டாசி மாதம் சீசன் துவங்கிய நிலையில், மாலை அலங்காரம் மற்றும் கேரளத்தில் உள்ள குருவாயூர், ஐயப்பன் ஆகிய கோயில்களில் மலர் அலங்காரத்துக்காக பூக்களின் தேவை அதிகரித்தது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக பெய்துவந்த சாரல் மழையின் காரணமாக, கோழிக் கொண்டை பூவின் வரத்து அதிகரித்துள்ளது. இந்த பூவுக்கு தற்போது அதிக வரவேற்பு கிடைத்துள்ளது.

செவ்வந்திப் பூ வரத்து இல்லாத நிலையில், தற்போது மாலைகள் கட்டுவதற்கு கோழிக் கொண்டை பூ மிகவும் பயன் தருவதாக உள்ளது.

இந்த கோழிக் கொண்டை பூ கிலோ ஒன்றுக்கு ரூ. 20 முதல் 30 வரை விலை கிடைப்பதால், விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நிலக்கோட்டை பகுதியில் மல்லணம்பட்டி, குரும்பப்பட்டி, அணைப்பட்டி, விளாம்பட்டி, சிலுக்குவார்பட்டி, சீரகம்பட்டி, கவிராயபுரம், முருகதுவாரன்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் கோழிக் கொண்டை பூ விவசாயம் நடைபெற்றுள்ளது.

வறட்சியைத் தாங்கி வளரும் இந்த பூவின் வகைகள், தற்போது பெய்துவரும் சாரல் மழையால் நன்கு திரட்சியுடன் காணப்படுகின்றன. ஐப்பசி மாதம் துவங்க

உள்ள நிலையில், ஐயப்பன் கோயில் சீசன் துவங்க உள்ளது. மேலும் ஐப்பசி மாதம் பிறந்தது முதல் திருமண முகூர்த்த சீசனும் துவங்க உள்ளது.

எனவே, மாலை மற்றும் மணவறை அலங்காரம் ஆகியவற்றுக்கு கோழிக் கொண்டை பூ முக்கியப் பங்கு வகிக்கின்றது.

**வைகை அணையில் பாசனத்துக்கு தண்ணீரின் அளவு குறைப்பு**

தேனி மாவட்டம், வைகை அணையில் இருந்து பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட தண்ணீரின் அளவு புதன்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளது.

வைகை அணையிலிருந்து செப்டம்பர் 25 ஆம் தேதி முதல் ஒரு போக மற்றும் இரு போக பாசனத்துக்காக 1,860 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன்மூலம், 1,50,043 ஏக்கர் பாசன விவசாயிகள் பயன்பெற்று வந்தனர்.

இந்நிலையில், புதன்கிழமை காலையிலிருந்து 800 கனஅடி தண்ணீர் குறைக்கப்பட்டு, 1,060 கனஅடி தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,060 கன அடி தண்ணீரில் 1000 கனஅடி திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்ட விவசாயத்துக்கும், 60 கனஅடி தண்ணீர் மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்துக்காகவும் திறந்து விடப்பட்டுள்ளது.

இது குறித்து, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தது: திண்டுக்கல், மதுரை மற்றும் சிவகங்கை பகுதிகளில் மழை பெய்து வருவதால், தண்ணீரின் தேவை குறைந்துள்ளது. இதையடுத்து, நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. மழை குறைந்த பின்னர் மீண்டும் திறந்துவிடப்படும் என்றார்.

புதன்கிழமை மாலை அணைகளின் நிலவரம்: முல்லைப் பெரியாறு: நீர் மட்டம் - 118.50 அடி (152), நீர் வரத்து - 1,022 கனஅடி, நீர் வெளியேற்றம் - 800 கனஅடி.

வைகை அணை: நீர் மட்டம் - 50 அடி (71), நீர் வரத்து - 763 கனஅடி, நீர் வெளியேற்றம் - 1,060 கனஅடி.

மழைப் பொழிவு:(மி.மீ.) பெரியாறு - 63.2, தேக்கடி - 21.4, கூடலூர் - 9.5, பேரணை - 102, சண்முகாநதி - 3, உத்தமபாளையம் - 23, வீரபாண்டி - 9, வைகை - 28.2, மஞ்சளாறு - 28, மருதாநதி - 18.4, சோத்துப்பாறை - 2.

**பயிர்களில் பூச்சித் தாக்குதல்: விவசாயிகள் கவலை**

மழை இல்லாமல், குறைந்து விட்ட சாகுபடியிலும், பயிரைப் பூச்சி தாக்குவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாயிகள் வறட்சியை சந்தித்தனர்.

இந்த ஆண்டும் மழையை எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே கிடைத்தது. இருப்பினும் கிணற்றுப் பாசனத்தை நம்பி, திருப்பத்தூர் பகுதியில் சிறிய விவசாயிகள் நடவுப் பணிகளை செய்து வருகின்றனர். அதிலும் கவலையைத் தரும் வகையில் ஆனைக்கொம்பன் ஈ என்ற பூச்சித் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள் முற்றிலும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

மழையின்மையால் மொத்தமுள்ள சாகுபடி பரப்பான 15 ஆயிரம் ஏக்கரில் சுமார் 10 சதவீத விவசாயப் பணிகளே நடந்துள்ளன. இந்த நிலையில் பூச்சித் தாக்குதல் விவசாயிகளை மேலும் பாதிக்க வைத்துள்ளது. வேளாண் உதவி இயக்குனர் ஷர்மிளா கூறுகையில், பூச்சிகளைக் கட்டுப்படுத்த,நாற்றாங்காலில் 2 கிலோ பியூரடான் குருணை மருந்தினை மணலுடன் கலந்து இடவேண்டும்.

நடவு வயலில் கடைசி உழவின் போது ஏக்கருக்கு 10 கிலோ குருணை மருந்தினை மணலுடன் இடவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில மாவட்டங்களில் வியாழக்கிழமை (அக்.17) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகத்தின் சில பகுதிகளில் புதன்கிழமை மழை பெய்தது. அதிகபட்சமாக மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சோழவந்தானில் 120 மி. மீட்டர் மழை பெய்துள்ளது. அதேவேளையில், பாளையங்கோட்டையில்

அதிகபட்சமாக 102 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக திருப்பூரில் 66 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது.

மழை வாய்ப்பு...

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். வெப்பநிலை அதிகபட்சமாக 95 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும், குறைந்தபட்சம் 79 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

தருமபுரி, திருமங்கலம்- 70, பெரியாறு, அவினாசி- 60, விருதுநகர், ஆரணி, கோவை-40, காங்கேயம், முசிறி, ஏற்காடு-30, வேலூர், கரூர், அம்பாசமுத்திரம்- 20, திருப்பூர், சாத்தூர்- 10.

**தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகத்தின் சில பகுதிகளில் புதன்கிழமை மழை பெய்தது. அதிகபட்சமாக மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சோழவந்தானில் 120 மி. மீட்டர் மழை பெய்துள்ளது. அதேவேளையில், பாளையங்கோட்டையில் அதிகபட்சமாக 102 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக திருப்பூரில் 66 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது.

மழை வாய்ப்பு...

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய

மழை பெய்யக்கூடும். வெப்பநிலை அதிகபட்சமாக 95 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும், குறைந்தபட்சம் 79 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

தருமபுரி, திருமங்கலம்- 70, பெரியாறு, அவினாசி- 60, விருதுநகர், ஆரணி, கோவை-40, காங்கேயம், முசிறி, ஏற்காடு-30, வேலூர், கரூர், அம்பாசமுத்திரம்- 20, திருப்பூர், சாத்தூர்- 10.

**வெங்காயம், தக்காளி விலை உயர்வு**

மக்கள் அன்றாடம் உணவிற்காக அதிகமாக பயன்படுத்தும் தக்காளி மற்றும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

சென்னையின் மிகப்பெரிய காய்கறிச் சந்தையான கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக தக்காளி மற்றும் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. அதே சமயம் முட்டைகோஸ், கத்திரிக்காய் விலை குறைந்தும் உள்ளது.

இது குறித்து கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசனைக் குழு உறுப்பினர் செப்ந்தர்ராஜன் கூறியது:

வெங்காய மூட்டைகள் மற்றும் தக்காளிகள், பெரும்பாலும் வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து லாரிகளிலே கொண்டு வரப்படுகின்றன. தற்போது ஆயுதபூஜை, பக்ரீத் பண்டிகையை முன்னிட்டும், மழையின் காரணமாகவும் பல இடங்களில் லாரிகள் இயங்காததால் வெங்காய வரத்து குறைந்துள்ளது. இதனால் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு சாதாரணமாக வரும் 400-க்கும் மேற்பட்ட லாரிகளில், தற்போது 100 முதல் 150 லாரிகளே வருகின்றன. இதன் காரணமாக வெங்காயத்தின் விலை கிலோவுக்கு ரூ.5 முதல் 10 வரை உயர்ந்துள்ளது.

அதே சமயம் முட்டைகோஸ், கத்திரிக்காய், புடலங்காய்,இஞ்சி ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது. தற்போது மழை பொழிந்து வருவதால் விளைச்சல் அதிகரித்து, வரத்தும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இந்தக் காய்கறிகளின் விலை குறைந்துள்ளது என்று கூறினார்.

நேற்று (அக்.16) காய்கறிகளின் விலை நிலவரம் (1கிலோவில்):

(அடைப்புக்குறிக்குள் பழைய விலை)

சின்ன வெங்காயம் - ரூ.65 (55)

ஆந்திரா வெங்காயம் - ரூ.40 (30)

கர்நாடகா வெங்காயம் - ரூ.45 (35)

மகாராஷ்டிரா வெங்காயம் - ரூ.60 (50)

தக்காளி - ரூ.30 (20)

உருளைக்கிழங்கு - ரூ.20 (15)

முட்டைகோஸ் - ரூ.10 (15)

கத்திரிக்காய் - ரூ.20 (25)

புடலங்காய் - ரூ.12 (20)

நூக்கல் - ரூ.15 (15)

சேனைக்கிழங்கு - ரூ.20 (25)

சேப்பங்கிழங்கு - ரூ.18 (22)

கேரட் - ரூ.30 (30)

இஞ்சி(பழையது) - ரூ.100 (190)

இஞ்சி(புதிது) - ரூ.55 (75)

பட்டாணி - ரூ.150 (160)

பீன்ஸ் - ரூ.20 (20)

**குவிந்து கிடக்கும் கோதுமைத் தங்கம்**

அவல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தியப் பொருளாதாரத்திற்கு அருமருந்தாக இயற்கையின் கொடையாகிய மழை இந்தியாவுக்கு பரவலாகவே கிடைத்திருக்கிறது. விவசாய உற்பத்தியியால் நாம் பெறக்கூடிய நன்மையை ஆட்சியாளர்கள் உணர்ந்து அதற்குத் தக்கவாறு திட்டமிடுதல் அவசியமாகும். நமது பொருளாதார அவலத்தை நினைக்கவே பயமாக உள்ளது.

நம்மிடம் உள்ள நிதி இருப்பைக் கொண்டு நமது இறக்குமதிகளுக்கு ஆறு மாதம் மட்டுமே செலவழிக்க முடியும் என்ற அளவுக்கு அன்னிய வர்த்தகப் பற்றாக்குறை தொடர்கதையாக நீடித்துக் கொண்டே போகிறது.

2011-12-இல் 78 பில்லியன் டாலர், 2012-13-இல் 88 பில்லியன் டாலர், 2013-14-இல் 100 பில்லியன் டாலர் என்று ஆண்டுக்கு ஆண்டு வர்த்தகப் பற்றாக்குறையில் 10 பில்லியன் டாலர் அளவுக்கு பற்றாக்குறை வளர்ச்சி உள்ளது. தொழில் உற்பத்தியில் வளர்ச்சி இல்லை. இறக்குமதியில் வளர்ச்சி உண்டு.

அன்னிய நேரடி முதலீடு வந்தால் பற்றாக்குறை தீரும் என்ற தப்பெண்ணம் உள்ளது. 2011-12 இல் 22.4 பில்லியன் டாலர் என்ற அளவுக்கு அதிக அன்னிய நேரடி முதலீடு வந்தும்கூட, பற்றாக்குறை 100 பில்லியன் டாலருக்கு மேல் உயர்ந்துள்ளதே அது ஏன்?

நமது வர்த்தகப் பற்றாக்குறையை, நேராக பங்கு வர்த்தகத்திற்குச் செல்லும் அன்னிய நேரடி முதலீட்டாலும் ஏற்றுமதியாலும் ஈடு கட்ட முடியாது. அதற்காக ஏற்றுமதியை கைவிடவும் கூடாது. ஏற்றுமதியை உயர்த்தும் அளவில் இறக்குமதியைக் குறைக்கும் ஒரு பாலபாடம் இருப்பதை நமது ஆட்சியாளர்கள் மறந்துவிட்டனர்.

இறக்குமதியில் முன்னிலை வகிப்பது தங்கம் மட்டுமே (12 சதவிகிதம்).

கட்டித்தங்கம் வெட்டி எடுத்து அனைத்துலக நிதியத்திற்கு ஏற்றுமதி செய்கிறது அமெரிக்கா. அதை இறக்குமதி செய்கிறது இந்தியா. நம்மிடமும் தங்கம் உண்டு. அது கோலார் தங்கமல்ல; இந்தியாவில் கோதுமைத்தங்கம் கொட்டிக் கிடக்கிறது.

வெட்டும் செலவும் இல்லை. கோதுமைத் தங்கத்தை ஏற்றுமதி செய்தால் பற்றாக்குறை சுமை குறையும்.

நமது நாட்டின் தேவைக்குப் போக சுமார் 2.4 கோடி டன் கோதுமை உபரியாக இருப்பதாக அரசு தெரிவிக்கிறது. ஆகஸ்டு மாதமே 20 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு - அரசுத் துறை ஏற்றுமதிக்கு - அமைச்சரவை ஒப்புதல் தந்தும்கூட, இதுவரை ஏற்றுமதியாகவில்லை.

இனி வரும் மாதங்களிலாவது சரியானபடி திட்டமிட்டால் இந்தியாவின் கோதுமைத் தங்கம் ஏற்றுமதியை சுமார் 2 கோடி டன்களுக்கு உயர்த்தலாம். அனைத்துலக சந்தை விலை 1 டன் ரூ.15000 என்ற கணக்கில் கோதுமையை நல்ல நிலையில் பாதுகாத்து சுத்தப்படுத்தி விற்றால், 5 பில்லியன் டாலர் நாணயச் செலாவணி பெற முடியும் (1 டாலர் = 64 ரூ. என்ற நாணயநிகரத்தில்). துரித கதியில் ஏற்றுமதி செய்தால் மேற்படி இருப்பைப் பாதுகாக்கும் செலவு சுமார் 2 பில்லியன் டாலர் மிச்சமாகும். சுமார் 45,000 கோடி ரூபாய் நிதிப்பற்றாக்குறை ஏற்படாமல் உணவு நிர்வாகம் செய்யலாம்.

உணவுப் பாதுகாப்பு சட்டம் அமலானாலும்கூட, 2 கோடி டன் ஏற்றுமதி செய்ய முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் 2013-14 கரீஃப் கோதுமை உற்பத்தியுடன், 2013-14 இல் பொழிந்து தள்ளியுள்ள அதிக மழையால் 2014-15 ரபி பருவத்தில் உபரி கோதுமை உற்பத்திக்கும் வாய்ப்பு உள்ளது.

தவிரவும், உணவுப் பாதுகாப்பு சட்டம் அமலாக மேலும் ஓராண்டு அவகாசம் தேவைப்படலாம். இப்போது இந்திய வங்கிகள் வெளிநாடுகள் அன்னியக்கடன் விழா (ஸ்வாப் மேளா) நடத்தி டாலர் கடனை இரட்டிப்பு ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளபோது, நாம் நமது கோதுமைத் தங்கத்தை ஏற்றுமதி செய்தால் ஸ்வாப் மேளா டாலர் கடனைச் சிறிது அடைக்கலாம் அல்லவா?

பிப்ரவரி - ஏப்ரல் மாதம் டன் 290 டாலருக்கு விலை வந்தும்கூட நாம் நிர்ணயித்த குறைந்தபட்ச ஏற்றுமதி விலை டாலர் 300 என்பதால் 10 டாலர் பேரத்தால் 20 லட்சம் டன் கோதுமையை இந்திய உணவு கார்ப்பரேஷன் ஏற்றுமதி செய்யாமல்

நிறுத்தி வைத்தது. இப்படி 10 டாலர் விட்டுக் கொடுக்காததால் நாம் 100 டாலர் வரை சேமிப்புக்குச் செலவு செய்யும் சூழ்நிலை ஏற்பட்டது.

இப்போது கோதுமை விலை மேலும் சரிந்துள்ளது. உணவுக் கார்ப்பரேஷனிடம் 4.5 கோடி டன் கோதுமை இருப்பு இருந்தும்கூட ரபி சீசன் கோதுமையை உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிகார் ஆகிய மாநில வியாபாரிகள் டன் ரூ. 14,500 விலைக்கு பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்தனர். இது,குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு மேல் டன்னுக்கு ரூ. 1,000 மட்டுமே அதிகம். அதனால் இருப்பு இருந்தும் அரசின் ஏற்றுமதி தவிர்க்கப்பட்டதால் உள்ளூரில் கோதுமை விலை ஏறியது.

அனைத்துலக வர்த்தகத்தில், குறிப்பாக கோதுமை வியாபாரத்தில் போட்டி நாடுகள் நிறைய உள்ளன என்பதால், இந்த வியாபாரத்தில் குறைந்தபட்ச கோதுமை ஏற்றுமதி விலை நிர்ணயம் என்று பேசுவது புத்திசாலித்தனம் ஆகாது. ஏற்ற இறக்கத்தை அனுசரித்து பேரத்தை முடிப்பதே சரியான விலைக்கொள்கை. நாம் நமது பிடிவாதத்தைத் தளர்த்திக்கொண்டு, டாலரின் நாணய மதிப்பை ஒட்டி ஒரு டன் 245 டாலர் என்று பேசி முடிப்பது பயனுள்ளது. அனைத்துலகச் சந்தையில் அமெரிக்கா, 270 டாலர், ரஷியா 240 டாலர், உக்ரைன் 235 டாலர், பிரான்ஸ் 240 டாலர் என்று வியாபாரம் செய்யும்போது, இந்திய விலை மட்டும் 300 டாலர் என்றால் எந்த நாடு வாங்கும்? தவிரவும் இந்திய கோதுமையின் தரமும் குறைவானதுதான்.

கால்நடை உணவுக்குரிய சுத்தமற்ற கோதுமையையும் 220 டாலருக்கு மத்திய ஆசிய நாடுகள் வாங்குகின்றன. 300 டாலருக்குக் கீழே விற்க மாட்டேன் என்று இந்திய அரசு முரண்டு பிடித்து மேலும் 100 டாலர் செலவு செய்து பல மாதங்கள் பத்திரப்படுத்தி வைத்து புழுத்து, வண்டு வந்து மாவாகி எடையும் குறைந்து இறுதியில் வந்தவரை லாபம் என்று 150 டாலருக்கு விற்கப் போகிறார்களா?

குறைந்தபட்ச ஏற்றுமதி விலை ரூ.300 என்று நிர்ணயம் செய்த பிறகு, கால்நடைத் தீவனத் தேவைக்கு இறக்குமதி செய்யும் அரபு நாடுகளிடம் கமிஷன் பெறக்கூடிய வாய்ப்பு வரும்போது, உணவுக் கார்ப்பரேஷனின் தர ஆய்வாளரிடமிருந்து நல்ல கோதுமையையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ""கால்நடைத்தீவனம்'' என்ற

சான்றிதழ் வாங்கி 200 டாலர் என்று விற்பார்களா? ஆகக்கூடி நல்ல விளைச்சலும் ஏற்றுமதி வாய்ப்பும் நல்ல விலையும் சேர்ந்து கிடைக்கும் வாய்ப்பு நழுவ விடப்படுகிறது. தாய்லாந்து அரிசிக்கு ஏற்பட்ட கதி இப்போது இந்திய கோதுமைக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நிதிக்கொள்கை சரியான தடத்தில் செல்வதால் டாலரின் மதிப்பு வலுவடைந்து செல்கிறது. ஆகவே, அமெரிக்க கோதுமை விலையில் இறக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. போட்டி நாடுகளுடைய வியாபாரத்தை அமெரிக்கா பற்றிக் கொள்ளலாம். லண்டனின் அனைத்துலக தானிய சபை வழங்கும் தகவலின்படி 2013-14 இல் உலக கோதுமை உற்பத்தி 6 சதவீதம் உயரும். நுகர்வு 2 சதவீதம் மட்டுமே உயரும். விரைவில் இந்தியாவில் கரீஃப் அறுவடை நிகழ உள்ளது. உணவு கார்ப்பரேஷன் 3.45 கோடி டன் இருப்பு வைக்க இடம் தேட வேண்டும். இப்போது அரசின் அரிசி இருப்பு தனியார் அரிசி அரைவை ஆலைகளில் உள்ளன.

இதைப்பற்றி ஏற்கெனவே ஆடிட்டர் ஜெனரல் எச்சரித்துள்ளார். ஆகவே, அரசு செய்ய வேண்டியதெல்லாம் ஏற்றுமதி விலையை அனைத்துலக விலையை ஒட்டிக் குறைத்து ஏற்றுமதியில் ஈடுபட்டால் ரூபாய் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தவும் வாய்ப்பு உண்டு. நிதிப்பற்றாக்குறை, வர்த்தகப் பற்றாக்குறை ஆகியவற்றுக்காக அரசுப் பங்கை விற்பதைவிட அரிசி - கோதுமையை விற்பது தவறல்ல!

இந்திய வீதிகளில் கொட்டிக் கிடக்கும் இந்த கோதுமைத் தங்கத்தை மேற்கு திசைக்கு அனுப்பி டாலர் வருமானத்தை உயர்த்தி மேற்கு திசையில் வெட்டியெடுக்கப்படும் தங்கக் கட்டிகளை இறக்குமதி செய்யாமல் வாழ்ந்தால் இந்தியப் பொருளாதாரம் சீராகும். நல்ல வாய்ப்புகளை நழுவவிட்டால் நஷ்டம் நமக்கே.

கட்டுரையாளர்: இயற்கை விஞ்ஞானி.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை பட்டுவாடா**

புதுச்சேரியை அடுத்த லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை செவ்வாய்க்கிழமை பட்டுவாடா செய்யப்பட்டது.

கரும்பு விவசாயிகள், கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிலுவைத் தொகை தரப்படவில்லை எனக் கூறி பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தினர். இதைத்

தொடர்ந்து மத்திய அமைச்சர் நாராயணசாமி, முதல்வர் ரங்கசாமி ஆகியோரிடம் கோரிக்கை மனுக்களும் அளிக்கப்பட்டன.

இதையடுத்து புதுவை மாநில அரசு நிலுவைத் தொகையான ரூ.4.5 கோடியை விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை வழங்கியுள்ளது.

இது குறித்து கரும்பு விவசாயிகள் சங்கச் செயலர் செந்தில்குமார் கூறியது: பல்வேறு போராட்டங்களுக்குப் பின் இத்தொகையைப் பெற்றுள்ளோம். மேலும் எங்களிடம் பிடித்தம் செய்த வங்கிக் கடன் மற்றும் வட்டி ரூ.2 கோடியை உடனே வழங்கவேண்டும். மேலும் கரும்பு விலை நிர்ணயிக்க முத்தரப்புக் கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும் என்றார்.

கரும்பு நிலுவைத் தொகை வழங்க உதவிய மத்திய அமைச்சர், முதல்வர், செயலர், ஆலை சேர்மன், மேலாண் இயக்குநருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் செந்தில்குமார்.

**கடும் வறட்சியால் கருகும் "கற்பக விருட்சங்கள்'**

சாத்தான்குளம் வட்டத்துக்குள்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் பனை மரங்கள் கருகி அழிந்து வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில், கடந்த 3 ஆண்டுகளாக மழை இன்றி வறட்சியாலும், கடும் வெப்பத்தினாலும் கற்பகவிருட்சமான பனை மரங்கள் வேகமாக அழிந்து வருகின்றன.

கற்பக விருட்சம் என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது பதநீர், கருப்பட்டி தான். கற்பக விருட்சமான பனை மரம் மூலம் நமக்கு கருப்பட்டி, பதநீர், நுங்கு, பனங்கற்கண்டு, கிழங்கு ஆகிய உணவு பொருள்களும் விசிறி, ஓலை, பாய், ஓலைப்பெட்டி, நார்பெட்டி, கருக்கு, கட்டில், உத்திரம், கட்டை முதலான பொருள்களும் கிடைக்கிறது.

கடந்த காலங்களில் பனை ஓலையால் வேய்ந்த வீட்டில் சுகாதாரத்துடன், குளிர்ச்சியான அமைப்புடன் வாழ்ந்து வந்தனர். சாத்தான்குளம்,பேய்க்குளம்,

உடன்குடி பகுதிகளில் கடந்த 3ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் பனைத் தொழில் வேகமாக நலிவடைந்து வருகிறது.

கடும் வெப்பத்தால் பனை மரங்கள் கருகி அழிந்து வருகின்றன. பனைத்தொழிலில் முன்னேற்றம் இல்லாததால் இப்பகுதியில் உள்ள ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து நகரங்களை நோக்கி மாற்றுத் தொழில் செய்ய சென்றுவிட்டனர்.

இனிவரும் காலங்களில் பனைத்தொழில் நசிவடைந்து பதநீர், கருப்பட்டி எல்லாம் கண்காட்சிப் பொருளாகும் நிலை உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு பனை மரத்தின் மூலம் ஆண்டுக்கு 180 லிட்டர் பதநீர், 25 கிலோ கருப்பட்டி, 16 கிலோ பனங்கற்கண்டு, 12 கிலோ தும்பு, 2 கிலோ கருக்கு, 10 கிலோ விறகு, 10 கிலோ ஓலை, 20 கிலோ நார் போன்ற பொருள்கள் கிடைப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகிறது.

ஆனால் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி இந்தியாவில் 9 கோடி பனைமரங்கள் இருந்துள்ளது. இதில் 5 கோடி தமிழகத்தில் இருந்துள்ளது. ஆனால் தற்போது கடந்த 2 ஆண்டுகளில் பனை மரங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. கடும் வறட்சியாலும், பனைத்தொழிலாளர்கள் வறுமையில் வாடுவதாலும் கருகி வரும் பனை மரங்கள் செங்கல் சூளை விறகுக்கும் வெட்டப்படுகிறது.

தற்போது பனை சார்ந்த தொழில்கள் வளர்ச்சி அடையாததாலும் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் எண்ணிக்கை குறைவதாலும் பனைத் தொழிலும் மிகவும் நலிவடைந்து வருகிறது.

இனிவரும் காலங்களிலாவது வருண பகவானின் கருணையும், தமிழக அரசின் கருணையும் கிடைத்தால் மட்டுமே கற்பக விருட்சமான பனை மரங்களும், பனைத் தொழிலாளர்களும் வளர்ச்சியடைவார்கள். மேலும்  நஷ்டமடைந்து வரும் பனைத் தொழிலாளர்களுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என பனைத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெற் பயிரில் குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்துதல்!**

திருநெல்வேலி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற் பயிர்களில் குருத்துப் பூச்சியின் தாக்குதல் ஆங்காங்கே பரவலாகக் காணப்படுகிறது. இந்தக் குருத்துப் பூச்சியானது தண்டு துளைப்பான் எனவும் அழைக்கப்படுகிறது.

இப் பூச்சியின் புழுக்கள் தூர்களில் சிறு துவாரம் ஏற்படுத்தி தண்டுக்குள் சென்று தண்டுப்பகுதியை உணவாக உள்கொள்கிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்: தழைச்சத்து உரங்களை மொத்தமாக இடமால் பிரித்து இட வேண்டும். தழைச்சத்துடன் வேப்பம் புண்ணாக்கு கலந்து இட வேண்டியது அவசியம். இனக் கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 என்ற வீதத்தில் வைத்து ஆண் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அளிக்கலாம்.

தாக்குதல் பொருளாதார சேத நிலையாகிய வெண்கதிர் 2 சதவீதத்துக்கு அதிகமாகவோ அல்லது சாய்ந்த நடுக்குருத்து 10 சதவீதத்துக்கு அதிகமாகவோ இருந்தால் பூச்சி மருந்துகளை தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

குளோர் ஆன்ட்ரனிலிபுரோல் 18.5 சதவீதம் 60 மி.லி. என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 5 சதவீதம், எஸ்பி 400 கிராம் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். பாஸ்பமிடான் 40 சதவீதம், எஸ்எல் 500 மிலி என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தலாம். இல்லையெனில் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 4 சதவீத குருணையை ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவில் இட்டுக் கட்டுப்படுத்தலாம்.

**கிருஷ்ணகிரியில் இடியுடன் மழை**

கிருஷ்ணகிரியில் புதன்கிழமை இரவு இடியுடன் கூடிய மழை பெய்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கடும் வெயில் அடித்தது. இந்த நிலையில், திடீரென புதன்கிழமை அதிகாலை மழை பெய்தது. தொடர்ந்து, பகலில் கடும் வெயில் அடித்தபோதும், இரவு 8 முதல் 9 மணி வரை இடியுடன் கூடிய மழை பெய்தது.

இதனால், நகரில் சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. திடீர் மழையால், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் பெரும் சிரமமடைந்தனர்.

கிருஷ்ணகிரி மட்டுமல்லாமல் காவேரிப்பட்டணத்திலும் மழை பெய்தது. இந்த மழையால் நிலத்தடி நீர் உயர வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**மழையில்லாமல் காய்ந்து போன வாழைத் தோட்டங்கள்**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி பகுதியில் போதுமான அளவு மழை பெய்யாததால், வாழைத் தோட்டங்கள் காய்ந்து வருகின்றன.

தம்மம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள செந்தாரப்பட்டி, வாழக்கோம்பை, பனந்தோப்பு, நாகியம்பட்டி, உலிபுரம், பிள்ளையார்மதி, கொண்டயம்பள்ளி, கோனேரிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே போதுமான அளவு மழையில்லாமல், நிலத்தடி நீர்மட்டம்  குறைந்து போனதால் விவசாயம் சரிவர நடைபெறவில்லை.

கெங்கவல்லி பகுதியில் சுமார் 100 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பாக்கு மரங்கள் மழையின்றி காய்ந்துபோனதால் வெட்டப்பட்டு அறுப்பு மில்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிலையில், தற்போது போதிய அளவு மழையின்றி வாழைத்தோட்டங்களும் காய்ந்து வருகின்றன.

பருவம் தவறி ஒரு வாரத்துக்கு முன்பு பெய்த மழையால் வாழைத் தோட்டங்களுக்கு பயனில்லாமல் போய்விட்டது.

இதுகுறித்து வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள்  கூறியது:

போதிய அளவு மழை பெய்யாததால் தற்போது பயிரிடப்பட்டுள்ள வாழை மரங்களில் விளைச்சல் இல்லை. மேலும், இந்த பகுதிகளில் சுமார் 60 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள வாழைகள் காய்ந்துவிட்டன.

இந்த வாழைத் தோட்டங்களை அழிப்பதை தவிர வேறுவழியில்லை என்றனர் அவர்கள்.

**கொப்பரை விலை சரிவு**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடந்த ஏல விற்பனையில் கொப்பரை விலையில் சரிவு ஏற்பட்டது.

இங்கு வாரந்தோறும் புதன்கிழமை கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. கடந்த வாரத்தைவிட கொப்பரை விலை கிலோவுக்கு ரூ.1.10 குறைந்தது. இந்த வாரம் மொத்தம் 530 மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன.

இவற்றில் விலை குறைந்துபோனதால், 166 மூட்டைகளை விற்பனை செய்யாமல் விவசாயிகள் நிறுத்தி வைத்தனர். மீதி 364 மூட்டைகளிலிருந்த 18 ஆயிரத்து 240 கிலோ பருப்புகள் ரூ.10 லட்சத்து 55 ஆயிரத்து 100-க்கு விற்பனை செய்யப்பட்டன.

அதிகபட்ச விலையாக கிலோ ரூ.64.25-க்கும், குறைந்தபட்சம் ரூ.35.35-க்கும் ஏலம் போனது. சந்தை நிலையில்லாமல் இருப்பதால், வரும் வாரங்களில் கொப்பரை விலை மேலும் குறையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 70.22 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,100 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 2,394 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,400 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.04 டி.எம்.சி.

இன்றைய வேளாண் செய்திகள்

17.10.2013

## இயற்கை உரம் பயன்படுத்த விவசாயிகளுக்கு...வேண்டுகோள் மானியத்தில் தேன் சேகரிப்பு பெட்டிகள் வினியோகம்

திண்டுக்கல் : இயற்கை உரத்தை பயன்படுத்தும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, நடப்பு ஆண்டில் 25 உர படுக்கைகள், 200 தேன் சேகரிக்கும் பெட்டிகள் 50 சதவீத மானியத்தில் வழங்க தோட்டக்கலைத் துறையினர் முடிவு செய்துள்ளனர். விளை நிலங்களின் சாகுபடி பரப்பளவு ஆண்டுதோறும் குறைந்து வருவது வேளாண் துறையினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மின்சார பற்றாக்குறை, மழை இல்லாதது, வேலையாட்கள் கிடைக்காதது போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சாகுபடி பரப்பளவினை தங்கள் வசதிற்கேற்ப சுருக்கி கொண்டனர். குறுகிய காலத்தில் அறுவடை செய்வதற்கு வசதியாக செயற்கை உரங்களையும், பூச்சி கொல்லி மருந்துகளையும் அதிக அளவில் பயன்படுத்தியதால், நிலங்களும் பாழ்பட்டுள்ளன. காலதாமதமாக விழித்துக்கொண்ட வேளாண் துறையினர் தற்போது இயற்கை உரங்களை பயன்படுத்தி விளை நிலங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதற்காக 50 சதவிகித மானியத்தில் உர படுக்கைகள், தேன் சேகரிப்பு பெட்டிகள், தேனீக்கள், அதற்கான உபகரணங்கள் அனைத்தையும் வழங்க முன்வந்துள்ளனர். தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் 2013 - 14 ம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் உர படுக்கைகள் 50 சதவிகித மானியத்தில் வழங்குவதற்காக ரூ. 1.25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயிரத்து 600 ரூபாய் மதிப்புள்ள தேன் பெட்டி ரூ. 800 க்கும், ஆயிரத்து 400 ரூபாய் மதிப்புள்ள தேனீக்கள் ரூ. 700 க்கும், 14 ஆயிரம் மதிப்புள்ள உபகரணங்கள்

ரூ. 7 ஆயிரத்திற்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு தரமான காய்கறிகளை விளைவிப்பதோடு, விளை நிலங்களையும் பாதுகாக்க முன்வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வேளாண்மைத்துறையினரிடம் உள்ளது

## பாரம்பரிய பயிர்களை சாகுபடி செய்ய அறைகூவல்! :கட்டடமாகும் விளைநிலங்களால் உணவு உற்பத்திக்கு "ஆப்பு'

ஊட்டி:"நீலகிரி மாவட்டத்தில், அதிகரித்து வரும் கட்டடங்களால், உணவு உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது' என, உலக உணவு தின நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.ஊட்டி நகர விழிப்புணர்வு சங்கம் மற்றும் ஒய்.டபிள்யு.சி.ஏ., இணைந்து, உலக உணவு தினத்தை கொண்டாடின.ஊட்டி நகர விழிப்புணர்வு சங்க தலைவர் ஜனார்த்தனன் தலைமை வகித்து பேசுகையில்,""நீலகிரியில், விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு,"கான்கிரீட் காடு'களாக மாற்றப்படுவதால், உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மும்பை உட்பட வட மாநிலங்களை சேர்ந்த பலர், நீலகிரியில் உள்ள விளை நிலங்களை வாங்கி, ஆடம்பர சொகுசு பங்களா, காட்டேஜ், ரிசார்ட் அமைத்து கொள்கின்றனர். இதன் மூலம், நீரோடைகள் திசை மாற்றப்பட்டு, இயற்கை சுரண்டப்படுகிறது. கேரளா, கர்நாடகா, காஷ்மீர், இமாசல பிரேதச மாநிலங்கள் போன்று, விளை நிலங்கள் விற்பனை செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும்," என்றார்.கிளன்மார்கன் பகுதியில் மூலிகை பண்ணை வைத்துள்ள சுவாமி டேவிட் பேசுகையில்,""ரசாயன உர பயன்பாடு அதிகரித்துள்ளதால், மண் மலடாகி விட்டது; இதனால், உணவு பொருட்களில் சத்துகள் குறைந்து வருகின்றன. எனவே, மூலிகை உர பயன்பாடை அதிகரிக்க வேண்டும்," என்றார்.ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் நஞ்சன் பேசுகையில்,""ஏழைகளின் உணவு எனப்படும் கீரைகளை அதிகம் உண்பதால், அஜீரண கோளாறு, வயிற்று புண் உட்பட உபாதைகள் நீங்கும்; வீட்டு தோட்டங்களில் அதிகளவு கீரைகளை பயிரிட வேண்டும்," என்றார்.ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ராஜா பெட்டன், வாசமல்லி, ஒய்.டபிள்யு.சி.ஏ., பொருளாளர் ரத்னா, உறுப்பினர் ஷர்மிளா உட்பட பலர் பேசினர். ஒய்.டபிள்யு.சி.ஏ., திட்ட

மேலாளர் பேட்ரிக் டைடஸ் நன்றி கூறினார்.
மூலிகை தோட்டத்தில்பாரம்பரிய பயிர்...
விழாவையொட்டி, ஒய்.டபிள்யு.சி.ஏ., வளாகத்தில், மூலிகை தோட்டம் அமைக்கப்பட்டது. பழங்குடியின மக்கள் தங்களின் காய்ச்சலுக்கு மருந்தாக பயன்படுத்தும் முள்ளுப் பழ செடி, பாரம்பரிய உணவான ராகி, சாமை, வயிற்றுப் புண்ணை குணமாக்கும் மணதக்காளி கீரை, 5 ஆண்டுகள் தொடர்ந்து விளைச்சல் தரக் கூடிய பீன்ஸ் செடிகள் போன்றவை பயிரிடப்பட்டன. "வீட்டு தோட்டம் வைத்திருப்போர், இத்தகைய பாரம்பரிய பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும்' என, அறைகூவல் விடுக்கப்பட்டது.

## சூரியகாந்தி விதை விலை குறைவு கையிருப்பை விற்குமாறு யோசனை

திண்டுக்கல்:சூரியகாந்தி விதைக்கான விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லாததால், கையிருப்பை உடனடியாக விற்பனை செய்யுமாறு, விவசாயிகளுக்கு வேளாண் வணிகத்துறை யோசனை தெரிவித்துள்ளது.
தமிழகத்தில், சித்திரையில் விளைவிக்கப்பட்ட சூரியகாந்தி விதைகள், தற்போது விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளன. மின்சார பற்றாக்குறை, மழை இல்லாதது, வேலையாட்கள் கிடைக்காதது போன்ற காரணங்களால் மகசூல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.
நடப்பு ஆண்டிற்கு தேவையான எண்ணெய் பொருட்களை வெளி நாடுகளில் இருந்து கொள்முதல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. சோயா எண்ணெய் 1.3 மில்லியன் டன்னும், சூரியகாந்தி எண்ணெய் 1.2 மில்லியன் டன்னும், இதர உணவு எண்ணெய் 10 ஆயிரம் டன்னும் இறக்குமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் மாதங்களில் சூரிய காந்தி விதைகளுக்கான விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இதன்மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது. விவசாயிகள், அதிக விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் சூரியகாந்தி விதையை இருப்பு வைத்திருந்தால் நஷ்டத்தை எதிர்கொள்ள நேரிடும். எனவே, தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கிலோ ரூ. 38 விலைக்கு விதைகளை விற்பனை செய்து பயனடையுமாறு விவசாயிகளுக்கு வேளாண் வணிகத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## தென்னை சாகுபடியை அதிகரிக்க திட்டம்

கம்பம் : தென்னை சாகுபடியைஅதிகரிக்க, தென்னை வளர்ச்சி வாரியம் பல்வேறு மானிய திட்டங்களை அறிமுகம் செய்யவும், தென்னை சாகுபடி குறித்த கருத்தரங்குகளை நடத்தவும் முடிவு செய்துள்ளது.

அதிக செலவில்லாத பயிர் வகைகளில் தென்னை முதலிடம் பெறுகிறது. குறைந்த தண்ணீர், உரம், அதிக பராமரிப்பு தேவைப்படாத நிலை, குறுகிய காலத்தில் வருவாய் என தென்னை சாகுபடியில் பல நன்மைகள் கிடைக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், தென்னையின் அனைத்து பாகங்களும் வருவாயை தருகிறது. மட்டை, சோகை, இளநீர், தேங்காய், சிரட்டை, பாலை, மரம் என அனைத்தும் விற்பனை செய்ய முடியும்.

தேனி மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி இருந்தது. ஒரு காலத்தில் தென்னையை விரும்பி சாகுபடிசெய்த விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக தென்னையை தாக்கி வரும் நோய்களால் பயந்து போய், தென்னை சாகுபடியை தவிர்த்து வருகின்றனர்.

கேரள, தஞ்சை வாடல் நோய் உள்ளிட்ட பலவøயான நோய்கள் தாக்குகின்றன.

கேரள வாடல் நோய் தாக்கினால், சம்பந்தப்பட்ட மரத்தை வெட்டி அப்புறப்படுத்திட வேண்டும். இல்லையென்றால், அந்த தோப்பில் உள்ள மரங்கள் அனைத்திலும் பரவும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். படிப்படியாக காய்க்கும் திறன் குறையும்.

கேரள வாடல் நோய் பாதித்த மரங்களை வெட்டுபவர்களுக்கு மரத்திற்கு 250 ரூபாய் மானியாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வழங்கினார்கள்.

ஆனால் இப்போது அது நடைமுறையில் இல்லை. இருந்த போதும், இப்போதும் தென்னை மரங்களை வெட்டி அழித்து வருகின்றனர். புதிதாக தென்னை சாகுபடிக்கு ஒருவரும் முன்வருவதில்லை. இந்நிலையில் தென்மாநிலங்களில் குறிப்பாக தமிழகம் மற்றும் கேரளாவில் தென்னை சாகுபடி குறித்த "சர்வே' ஒன்று நடத்தப்பட்டு மத்திய விவசாய அமைச்சகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில், கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி

வாரியத்திற்கு, மத்திய விவசாய அமைச்சகம் சில பரிந்துரைகளை செய்துள்ளது. அதன்படி, தென்னை சாகுபடியை அதிகரிக்க உயர்ரக ஒட்டு கன்றுகள் இலவசமாக அல்லது குறைந்த விலையில் வழங்குவது, காய்ப்பு திறன் வரும் வரை, பராமரிப்பிற்கென உதவி தொகை வழங்குவது, உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பரிந்துரை செய்வது, தேங்காய்களை கொள்முதல் செய்வது உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்பட உள்ளது. மேலும், தென்னை சாகுபடி குறித்த கூட்டங்களை கிராமப்பகுதிகளில் நடத்தி, தென்னையின் முக்கியத்வத்தை பொதுமக்களுக்கு விளக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### பருவத்தில் நெல் விதைப்பு கடலாடியில் மழைக்காக ஏக்கம்

சாயல்குடி:சாயல்குடி, கடலாடியில் நெல் விதைப்பு பருவகாலம் முடியும்வரை மழை பெய்யாததால், விளையும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடலாடி தாலுகாவில் விவசாயிகள், ஒவ்வொரு ஆண்டும், புரட்டாசி முதல் வாரத்திலேயே நெல் விதைப்பில் ஈடுபடுவது வழக்கம். ஆனால், மழை பெய்யும் என காத்திருந்து, மாதம் முடிய இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், இதுவரை, துளி மழை கூட இல்லை.

அடுத்த மாதம் கனமழை பெய்யும் காலம். வயல் வெளியில் தண்ணீர் நிரம்பிக்கிடக்கும். விதைப்பதற்கு வாய்ப்பு இருக்காது. இதனால், மழை இல்லாத போனாலும் பருவம் தப்பக்கூடாது என கருதி, நெல் விதைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் நம்பிக்கையை வருண பகவான் நிறைவேற்றட்டும்.

### அக்.18ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை, கலெக்டர் அலுவலகத்தில், அக்.18ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். அன்று காலை 10.30 மணிக்கு, கலெக்டர் ராஜாராமன் தலைமையில்,

குறைதீர் கூட்டம் நடக்கும். மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் விவசாயத்துறை சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம்.

### கோமாரி நோய் தாக்கம் கால்நடை அதிகாரி அறிவிப்பு

வாலாஜாபாத்:காஞ்சிபுரம் மண்டலத்தில் உள்ள கிராமங்களில், கோமாரி நோய் தாக்குதல் மற்றும் அறிகுறி இருப்பின், கால்நடை துறை அதிகாரிகளை அணுகலாம் என, கால்நடைத் துறை நிர்வாகம் அறிவித்து உள்ளது.காஞ்சிபுரம் மண்டலத்தில், 27 கால்நடை உதவி மருத்துவமனை, 10 கால்நடை கிளை நிலையங்கள் உள்ளன. இவற்றில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. தற்போது பருவ நிலை மாற்றத்தின் காரணமாக, வாய், கால், பால் காம்பு ஆகிய இடங்களில், கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதற்கு, கால்நடைத் துறை சார்பில், கோமாரி தடுப்பூசிகள் அந்தந்த உதவி மருத்துவமனைகளில், போடப்பட்டு வருகிறது. தடுப்பூசிகள் போடப்பட்டும் நோய் தாக்கம் இருப்பின், கால்நடைத் துறை உதவி இயக்குனர் நோய் தடுப்பு பிரிவு எண்: 94450 32605 மற்றும் 98849 94294 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### நெல் நடவு பணி சுறுசுறுப்பு

தர்மபுரி: வட கிழக்கு பருவமழை துவங்கியுள்ளதை அடுத்து நெல் நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டதில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் ஒன்று நெல் ஆகும். மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஒட்டி, விவசாயிகள், 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்தாண்டு, தென்மேற்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்ததாலும், மாவட்டத்தில் வடகிழக்கு மழை பரவலாக பெய்து வருவதாலும் விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக வடகிழக்கு பருவமழை துவங்கியதில் இருந்து தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உட்பட மாவட்டம்

முழுவதும் விவசாயிகள் நெல் சாகுபடி பணிகளான உழவு, வயல் தயாரித்தல், நாற்று தயாரிக்கும் பணி மற்றும் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இது குறித்து வேளாண் இணை இயக்குனர் மனோகரன் கூறியது:
தர்மபுரி மாவட்டத்தில், பருவமழையை ஒட்டி விவசாயிகள் இதுவரை, இரண்டாயிரம் ஹெக்டரில் நெல் நடவு செய்துள்ளனர். மேலும் நெல் நடவு செய்ய தேவையான பணிகளில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
நடப்பாண்டில், 25 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெல் தானிய இயக்கம் சார்பாக, 180 மெட்ரிக் டன் நெல் விதை விவசாயிகளுக்கு, ஒரு கிலோ, ஐந்து ரூபாய் என்ற மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் அதிக மகசூல் பெற 400 செயல் விளக்க பண்ணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு மாதிரி பண்ணைக்கு, 3 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.
நெல் சாகுபடியை அதிகரிக்க வேளாண் துறை சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நெல் சாகுபடிக்கு வழங்கப்படும் மானியம் உள்ளிட்ட விபரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ள அப்பகுதிகளில் உள்ள வேளாண் உதவி அலுவலர்கள் மற்றும் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு கூறினார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 17.10.2013

### ஆன்லைன் மஞ்சள் வர்த்தகத்துக்கு தடை விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தல்



ஈரோடு : மஞ்சள் இருப்பு குறைந்து வரும் நிலையில் மஞ்சள் விலை உயர்வதற்கு பதிலாக விலை சரிவடைந்து வருவதற்கு ஆன்லைன் வர்த்தகத்தில் நடைபெறும் முறைகேடுகளே காரணம் என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத்தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது: மஞ்சள் சீசன் இல்லாத சமயங்களில் வரத்து குறைவதால் விலை அதிகரிப்பது தான் இயல்பு. ஆனால், தொடர்ந்து மஞ்சள் வரத்து குறைவாக இருக்கும் போதுகூட விலை உயராமல் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணம் ஆன்லைன் பட்டியலில் மஞ்சள் இடம் பெற்றிருப்பது தான். ஆன்லைன் மூலம் 3 மாதத்தில் இருந்து 1 ஆண்டுக்கு முன்பே மஞ்சளுக்கான விலையை நிர்ணயிப்பதால் விலை வீழ்ச்சியடைகிறது.

2014ம் ஆண்டு மே மாதத்தில் விற்பனைக்கு வரும் ஒரு குவின்டால் விரலி மஞ்சளை ரூ.5,900க்கு விற்பதாக ஆன்லைன் வர்த்தகர்கள் விலை நிர்ணயித்துள்ளனர். குறிப்பிட்ட இந்த விலைக்கு மஞ்சளை விற்பனை செய்வதாகக் கூறும் ஆன்லைன் வர்த்தகரிடம் மஞ்சள் இருப்பு நிச்சயம் இருக்க வாய்ப்பு இல்லை. ஒருவேளை அடுத்த ஆண்டு மே மாதத்தில் ஆன்லைன் வர்த்தகர்

இந்த விலைக்கு மஞ்சளை விற்பனை செய்ய முடியவில்லை எனில் மொத்த தொகையில் வெறும் 2 சதவீதம் மட்டும் அபராதமாக செலுத்தினால் போதும்.

மஞ்சள் வர்த்தகத்தை ஆன்லைனில் நடத்தி வரும் தேசிய விவசாய விளைபொருள் முன்பேர வர்த்தக நிறுவனமான என்டிடெக்ஸ் அமைப்பு மஞ்சள் வர்த்தகத்தை சூதாட்டத்தை போன்று நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலும் ஆன்லைன் வர்த்தகத்தில் மஞ்சளுக்கு நிர்ணயிக்கும் தொகைக்கு மஞ்சளை வழங்காவிட்டால் 20 சதவீதம் வரை அபராதம் செலுத்த வேண்டும் என்ற விதிமுறை இருந்தது.

தற்போது வெறும் 2 சதவீதமாக அபராதத் தொகையை குறைத்து விட்டதால் தொடர்ந்து மஞ்சள் ஆன்லைன் வர்த்தகத்தில் முறைகேடுகள் நடந்து வருகிறது. இப்பிரச்னைக்கு தீர்வு காண ஆகஸ்ட் 26ம் தேதி டெல்லியில் பிரதமரை சந்தித்து மனு கொடுக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை எதுவுமில்லை. இப்பிரச்னையில் அடுத்த கட்டமாக இந்த மாதம் 24ம் தேதி அகில இந்திய அளவில் விவசாய சங்கங்கள் திருவண்ணாமலையில் கூடி அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படும். இவ்வாறு தெய்வசிகாமணி தெரிவித்தார்.

எக்ஸ்ட்ரா தகவல்

மஞ்சளை ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபடுத்தி வரும் என்சிடெக்ஸ் பங்கு சந்தை நிறுவனத்துக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது

**விவசாய பணிகளில் பெண்களே அதிகம்**



புதுடெல்லி : இந்தியாவில் விவசாயம் தொடர்பான பணிகளில் 80% பெண்கள் ஈடுபடுகின்றனர். நாட்டில், சுமார் 17 கோடி பெண்கள் விவசாயம் மற்றும் அது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 60 முதல் 80 சதவீதம் வரையில் தானிய உற்பத்தி பணியில் அவர்களின் பங்களிப்பு உள்ளது. இதேபோல், பால் பொருள்கள் உற்பத்தியில் 90 சதவீதம் பங்களிப்பு உள்ளது. ஆனால், 13 சதவீதம் பெண்கள் தான் நில உரிமையாளர்களாக உள்ளனர் என்று ஆக்ஸ்பேர்ம் இந்தியா தெரிவித்துள்ளது.

உலக உணவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி, அரசு சாரா தொண்டு நிறுவனமான ஆக்ஸ்பேர்ம் இந்தியா வெளியிட்ட செய்தியில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிர் சாகுபடி பருவத்தில் பெண்கள் சுமார் 3,300 மணி நேரம் பணியாற்றுகின்றனர். அதேநேரத்தில் ஆண்கள் 1,860 மணி நேரம் தான் பணிபுரிகின்றனர். ஆனால், வெளி உலகில் ஆண்கள்தான் விவசாயி, தொழிலாளி, உழைப்பாளி என்று போற்றப்படுகின்றனர். இது ஏன் என்றால், விவசாய பணியின் அடிப்படையில் அந்த அந்தஸ்து அவருக்கு கிடைக்கவில்லை. நிலத்தின் உரிமை யாளர் என்ற உரிமையின் அடிப்படையில் தான் கிடைக்கிறது.

கிராமங்களில் உள்ள பெண்களுக்கு நிலம் சொந்தமாக இல்லை. இதனால், அவர்களுக்கு வங்கிகள் விவசாயக் கடன் எதையும் வழங்குவது இல்லை. இதுதவிர வேறு சமூக சலுகைகளும் கிடைப்பதில்லை. விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் வறுமையால் பெண் விவசாயி தற்கொலை செய்து கொண் டால், அவருக்கு எந்த இழப்பீடும் கிடைப்பது இல்லை. காரணம் நிலம் எதுவும் அவரது பெயரில் இல்லாததுதான்.

‘சட்டம் வந்தும் பயனில்லை’

இந்து வாரிசு உரிமை சட்டம் , 2005ல் தேவையான திருத்தம் செய்யப்பட்டதால்

பெற்றோரின் சொத்தில் வாரிசு உரிமைப்படி பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட் டது. இதன்படி, பெண்களுக்கு நில உரிமை கிடைத்தபோதிலும் இதன் அளவு கடந்த 5 ஆண்டுகளில் 1%க்கும் சிறிது அதிகமாகத்தான் உள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டும். பெண்களையும் விவசாயியாக அங்கீகரிக்க வேண்டும் என்று ஆக்ஸ்பேர்ம் இந்தியா அமைப்பின் பொருளாதார நிபுணர் வனிதா சுனேஜா தெரிவித்தார்.

**ராஜபாளையம் விவசாயிகள் சோகம் காட்டு யானைகள் அட்டகாசம் வாழைத்தோப்புகள் சர்வ நாசம்**

ராஜபாளையம், : குடிநீர், இரை தேடி மலையை விட்டு கீழிறங்கிய காட்டுயானைகள் கூட்டம், ராஜபாளையம் அருகே வாழைத்தோப்புக்குள் புகுந்து மரங்களை உடைத்து நாசப்படுத்தின.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அருகே உள்ள மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில், கடும் வறட்சி நிலவுகிறது. குடிநீர் மற்றும் உணவுக்காக யானைகள் தற்போது மலையை விட்டு கீழே இறங்கி, அடிவாரத்தில் உள்ள தோட்டத்துக்குள் புகுந்து விடுகின்றன. தோப்புகளில் உள்ள வாழை, தென்னை மரங்களை உடைத்து நாசப்படுத்தி விடுகின்றன. நேற்றுமுன்தினம் மாலை சம்பந்தபுரம் புரசம்பாறை கருப்புசாமி கோயில் பகுதியில் யானைகள் மலையை விட்டு கீழே இறங்கின.

அப்பகுதியில் உள்ள ராம்குமார் என்பவருக்குச் சொந்தமான வாழைத்தோட்டத்துக்குள் திமுதிமுவென புகுந்தன. அங்கு காவலுக்கு இருந்த கருப்பன், யானைகள் கூட்டத்தைப் பார்த்து, தலைதெறிக்க தப்பி ஒடினார். யானைகள் அங்கிருந்த வாழைகளை சேதப்படுத்தி வாழைக்காய்களை பறித்துத் தின்றன. இதேபோன்று அப்பகுதியில் உள்ள மேலும் பல வாழைத் தோட்டத்தில் புகுந்து சேதப்படுத்தின. வாழை மரங்களை உடைத்து சேதப்படுத்தி விட்டு திரும்பியதால், இப்பகுதி விவசாயிகள் கடும் அதிருப்தியடைந் துள்ளனர். இதுகுறித்து வனத்துறையினரிடம் புகார் செய்தனர்.

விருதுநகர் மாவட்ட விவசாய சங்க தலைவர் ராமச்சந்திர ராஜா கூறுகையில்,

''சமீப காலமாக யானைகள் மலையை விட்டு கீழே இறங்கி வந்து தோட்டங்களைச் சேதப்படுத்துகின்றன. யானைகள் விளைநிலங்களுக்குள் நுழையாமல் தடுக்க கம்பி முள்வேலி போடவேண்டும் என வனத்துறையிடம் புகார் கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதேநிலை நீடித்தால் வனத்துறை மற்றும் கலெக்டர் அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிடுவதை தவிர வேறு வழியில்லை,'' என்றார்.

**விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக மழை**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு பரவலாக மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் 95.50 மிமீ மழை பதிவாகியுள்ளது.

ஆண்டு தோறும் பெய்யும் பருவ மழையின் அளவு குறைந்துவருகிறது. தமிழகத்தில் தென் மேற்கு பருவமழையால் வடமாவட்டங்களில் போதுமான அளவு மழை பெய்யவில்லை.

மழை பெய்யாததால் மாவட்டத்தில் ஏரி, குளங்கள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை இன்னும் ஒரு சில தினங்களில் துவங்கு மென வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பகலில் வெயில் கொளுத்தியது.

நேற்று முன்தினம் மாலை வானம் சற்று மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு இடி, மின்னல்கள் வந்து போனது. பின்னர் நள்ளிரவு முதல் மாவட்டம் முழுவதம் பரவலாக மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் வரை இடைவிடாமல் கொட்டிய மழையால் தாழ்வான இடங்களில் தண்ணீர் சூழ்ந்தன.

தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு வருகின்றது. இதனால் நேற்று காலை பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகள் சற்று அவதிக்கு உள்ளானார்கள்.

செஞ்சி 7. 50, திருக்கோவி லூர் 35.50, விழுப்புரம் 2, உளுந்தூர்பேட்டை 5, வானூர் 2.50, சங்கராபுரம் 43, மரக்காணம் 1 மிமீ மழை பதிவாகியுள்ளது.

மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் நள்ளிரவு 95. 50 மி.மீ மழை பெய்துள்ளது.

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயபாளையம், சங்கராபுரம், தியாகதுருகம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 2 மணி நேரம் மழை பெய்தது.

கள்ளக்குறிச்சியில் இடியுடன் மழை பெய்ததில் ஆண்டாள் நகர் பகுதியில் இடி விழுந்தது.

இதில் அப்பகுதியை சேர்ந்த ஜபரூல்லா என்பவர் வீட்டில் மின்விசிறி, சூசை மாரியப்பன் வீட்டில் டிவி, வீட்டுசுவர், பாஸ்கர் வீட்டில் டிவி, மின்விசிறிகள் என 10க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தது. இதனால் இப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மின்வாரிய ஊழியர்கள் சரி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.10.2013**

**கனமழையால், 35 சதவீத காய்கறி, பழங்கள் சேதம்**



கொல்கத்தா,

கடந்த 15 தினங்களில் பெய்த கனமழை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் அறுவடைக்கு தயாராகிக் கொண்டிருந்த காய்கறி, பழங்களில் ஏறக்குறைய 35 சதவீதம் சேதமடைந்துள்ளது. இதனால் பல கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

**வாழை தோட்டங்கள்**

ஆந்திரா, கர்நாடாக, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்கள் கடந்த இரண்டு வாரங்களில் புயல், மழையால் கடுமையான பாதிப்புக்குள்ளாயின. இதனால் காய்கறி மற்றும் பழத்தோட்டங்களில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக பலத்த காற்றால் பல வாழைத் தோட்டங்கள் நாசமாகி விட்டன.

காய்கறி, பழங்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில தினங்களில் மட்டும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காய்கறி, பழங்களின் விலை 10–15 சதவீதம் உயர்ந்து விட்டது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 6.46 சதவீதத்தை தொட்டுள்ள நிலையில், காய்கறி, பழங்கள் குறிப்பாக வெங்காயம் விலை உயர்வால் பணவீக்கம் மேலும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டில் ஆண்டுக்கு 150 டன் காய்கறியும், 77 டன் பழங்களும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதே சமயம் குளிர்பதன கிடங்குகள் மற்றும் பதப்படுத்தும் பிரிவுகள் போதிய அளவிற்கு இல்லாததால் ஆண்டுக்கு ரூ.2 லட்சம் கோடி மதிப்புள்ள காய்கறி, பழங்கள் வீணாகின்றன. அறுவடைக்குப் பிறகு அதிக இழப்பை கண்டு வரும் மாநிலங்களில் மேற்கு வங்காளம் முதலித்தில் உள்ளது. அங்கு மட்டும் ஆண்டுக்கு ரூ.13,657 கோடிக்கு காய்கறி, பழங்கள் வீணாகின்றன.

**<u>அசோசெம் மதிப்பீடு</u>**

இந்த விஷயத்தில் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு ரூ.11,400 கோடி மதிப்புள்ள காய்கறி, பழங்கள் சேதமடைகின்றன. பீகாரில் ரூ.10,700 கோடி அளவிற்கும், உத்தரபிரதேசத்தில் ரூ.10,300 கோடிக்கும் இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் உள்ளூர்களில் குளிர்பதன கிடங்குகளை அதிகரிப்பதுடன், மொத்த விற்பனை சந்தைகளையும் விரிவுபடுத்த வேண்டும் என அசோசெம் அமைப்பு யோசனை தெரிவித்துள்ளது. இந்த அமைப்பின் மதிப்பீடுகளின்படி 2021–க்குள் இந்தியாவின் காய்கறி, பழங்கள் உற்பத்தி 37.70 கோடி டன்னை எட்ட உள்ளது.

**நடப்பு ஆண்டில் தேயிலை உற்பத்தி 5% அதிகரிக்கும்**



கொல்கத்தா,

நடப்பு 2013–ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி சுமார் 5 சதவீதம் அதிகரித்து 118 கோடி கிலோவிற்கு மேல் அதிகரிக்கும் என இந்திய தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டில் தேயிலை உற்பத்தி 113 கோடி கிலோவாக இருந்தது.

**பருவமழை**

நடப்பு ஆண்டில் பருவமழை நன்றாக இருந்ததன் காரணமாக தேயிலை உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை மெய்ப்பிக்கும் விதமாக ஜனவரி முதல் ஆகஸ்டு மாதம் வரையிலான காலத்தில் தேயிலை உற்பத்தி கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.2 சதவீதம் அதிகரித்து 71 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

தேயிலை உற்பத்தியில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. அசாம் பள்ளத்தாக்கு, தோர்ஸ் மற்றும் தெராய் பகுதிகளில்மழை நன்றாக பெய்துள்ளது. இப்பகுதிகளில் தேயிலை உற்பத்தி செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் அதிகரிக்கும். நடப்பு ஆண்டில் இப்பகுதிகளில் ஒட்டுமொத்தத்தில் உற்பத்தி அதிகரிப்பதால் நாட்டின் தேயிலை 5 சதவீதம் அதிகரிக்கும். மொத்த தேயிலை உற்பத்தியில் இப்பகுதிகளின் பங்கு 60 சதவீதமாக உள்ளது.

நடப்பு ஆண்டில் தேயிலை இறக்குமதியையும் சேர்த்து உள்நாட்டில் மொத்த சப்ளை 120 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக மொத்த சப்ளை சராசரியாக 4.5 சதவீதம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதே காலத்தில் ஏற்றுமதியையும் சேர்த்து மொத்த தேவைப்பாடு ஆண்டுக்கு 1.5 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. 2012–ஆம் ஆண்டில் சப்ளை 115 கோடி கிலோவாகவும், தேவைப்பாடு (ஏற்றுமதி உள்பட) 110 கோடி கிலோவாகவும் இருந்ததாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

**முதல் காலாண்டில்…**

நடப்பு ஆண்டின் முதல் காலாண்டில் (ஜனவரி – மார்ச்) தேயிலை ஏற்றுமதி 34 சதவீதம் அதிகரித்து 6 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் தேயிலை ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரித்தால் கூட உள்நாட்டு தேவைக்கு 90 கோடி கிலோவுக்கும் அதிகமாக அளவு தேயிலை கிடைக்கும்என வாக்பக்ரி தேயிலை குழுமத்தின் செயல் இயக்குனர் பராஸ் தேசாய் தெரிவித்தார்.

## பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.16 லட்சத்துக்கு விவசாய விளை பொருட்கள் விற்பனை

பதிவு செய்த நாள் : Oct 17 | 12:09 am



அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.16 லட்சத்துக்கு விவசாய விளை பொருட்கள் விற்பனையானது.

<u>விவசாய விளை பொருட்கள் ஏலம்</u>

அம்மாபேட்டை அருகில் உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளை பொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு அம்மாபேட்டை, பூதப்பாடி, அந்தியூர் மற்றும் சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விவசாய விளை பொருட்களை கொண்டு வந்திருந்தனர்.

தேங்காய் ஏலத்துக்கு 1,358 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் சிறிய தேங்காய் ஒன்று 6 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் ஒன்று 13 ரூபாய்க்கும் என மொத்தம் 9 ஆயிரத்து 755 ரூபாய்க்கு விற்பனையானது.

கொப்பரை தேங்காய் ஏலத்துக்கு 63 மூட்டைகளில் கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் ஒரு குவிண்டால் கொப்பரைதேங்காய் குறைந்தபட்சவிலையாக 5 ஆயிரத்து 996 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 6 ஆயிரத்து 409 ரூபாய்க்கும் என மொத்தம் 81 ஆயிரத்து 556 ரூபாய்க்கு விற்பனையானது.

நெல் 57 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் பொன்னி ரக நெல் குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக 1,576 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 1,615 ரூபாய்க்கும், ஏ.டி.டி.399 ரக நெல் குறைந்தபட்சவிலையாக குவிண்டால் ஒன்று 1,276 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 1,461 ரூபாய்க்கும் என மொத்தம் 49 ஆயிரத்து 623 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>நிலக்கடலை</u>

நிலக்கடலை 1,265 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் பச்சை நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக 1,860 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 2 ஆயிரத்து 550 ரூபாய்க்கும், காய்ந்த நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக 3 ஆயிரத்து 300 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 4 ஆயிரத்து 900 ரூபாய்க்கும் என மொத்தம் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 442 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளை எள் ஒரு முட்டை கொண்டு வரப்பட்டிருந்தது. இது குவிண்டால் ஒன்று 6 ஆயிரத்து 249 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>மக்காச்சோளம்</u>

மக்காச்சோளம் 114 முட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக 1,307 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 1,342

ரூபாய்க்கும் என ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 596 ரூபாய்க்கு விற்பனையானது. அனைத்து விவசாய விளை பொருட்களும் மொத்தம் 16 லட்சத்து 19 ஆயிரத்து 323 ரூபாய்க்கு விற்பனையானது.